பக்கங்கள்:-16

# காலை முரசு

## பதவி விலகினார் பொலிஸ் பேச்சாளர்



சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி புத்திக மனதுங்க, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பதவியில் இருந்து நேற்று 07

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | பங்குனி 07 | வெள்ளிக்கிழமை | 21.03.2025 | அதிர்வு 228 |
| --- | --- | --- | --- | --- | --- |



### யாழில் 22 கட்சிகள், 13 சுயேச்சைகள் ‘அவுட்’

# சங்கு, மான், சைக்கிள், அர்ச்சுனா அணி வேட்புமனு நிராகரிப்பால் அதிர்ச்சியில்!

## நீதிமன்றத்துக்குப் போக முடிவு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 136 கட்சிகள் மற்றும் 23 சுயேச்சைக் குழுக்கள் தாக்கல் செய்திருந்த வேட்புமனுக்களில் 22 கட்சிகள் மற்றும் 13 சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. 06

# தமிழரசே தமிழரின் சொத்து என எடுத்தியம்ப ஓர் அரிய வாய்ப்பு!

### வேறு கட்சிகளுக்காக வேட்புமனு நிராகரிப்புக்கு எதிரான வழக்கைத் தொடர மாட்டேன் என்று சுமந்திரன் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

“இலங்கைத் தமிழரசுக் கட்சியே தமிழ் மக்களின் சொத்து என எடுத்தியம்ப ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்துள்ளது. எனவே, நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கே தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும்.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 07






உள்ளூராட்சி தேர்தல் வேட்பு மனு ஏற்றுக் கொள்ளுதல் தொடர்பான சிக்கல் தமிழர் அரசியலில் – குறிப்பாக வடக்கு அரசியலில் – பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருக்கின்றது.

கட்சிகள், தரப்புக்கள் என்ன குற்றச்சாட்டுகளை முன்வைத்தாலும் வேட்பு மனு நிரப்பும் விடயத்தில் அவை உரிய சிரத்தை எடுக்கவில்லை என்பது அப்பட்டமான உண்மை. அதனை மூடி மறைக்க அடுத்த தரப்புகள், கட்சிகள் மீது குற்றம் சுமத்துவது வேடிக்கையிலும் வேடிக்கை.

அதுவும் சுயேச்சைக் குழுவாக யாழ் மாவட்டத்தில் பல சபைகளுக்கு வேட்பு மனு தாக்கல் செய்த மருத்துவர் அர்ச்சுனாவின் போக்கு எதிர்பார்க்கப்பட்ட படி ஆச்சரியமாகவே அமைந்தது.

அவரது குழுக்கள் தாக்கல் செய்த எல்லா வேட்பு மனுக்களுமே அடியோடு நிராகரிக்கப்பட்டு விட்டன. வேட்பு மனுக்கள் பரிசீலனைக்கு வருவதற்கு முன்னரே, தமது வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டால் தங்கள் ஆதரவாளர்கள் பிறிதொரு தமிழ்த் தேசியக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் 06



# மஹபொல புலமைப்பரிசில் வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்திற்கு விரைவில் தீர்வு

மஹபொல புலமைப்பரிசில் கொடுப்பனவு வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதம் எதிர்வரும் வாரங்களில் வழமைக்கு கொண்டுவரப்படுமென கல்வி அமைச்சு தெரிவிக்கின்றது.

இந்த விடயம் தொடர்பாக அடுத்த வாரம் விசேட கலந்துரையாடல் நடைபெறும் என பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன கூறினார்.

சில பல்கலைக்கழகங்களில் முதலாம் வருடத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான மஹபொல புலமைப்பரிசில் கொடுப்பனவு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தாமதம் குறித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடல்கள் நடைபெற்றதாகவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

புலமைப்பரிசில் கொடுப்பனவு வழங்குவதில் ஏற்படும் தாமதத்தை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் முன்னெடுக்க எதிர்பார்ப்பதாகவும் பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.




# கொள்ளுப்பிட்டி வாகன விபத்து தொடர்பான வழக்கிலிருந்து லொஹான் ரத்வத்தே விடுதலை



கொள்ளுப்பிட்டி சந்தியில் வாகன விபத்தை ஏற்படுத்தி பின்னர், சட்டத்தரணி மற்றும் அவரது கனிஷ்ட சட்டத்தரணியை தூற்றி மரண அச்சுறுத்தல் விடுத்தார் என குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட முன்னாள் அமைச்சர் லொஹான் ரத்வத்தே அந்த குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்

இது தொடர்பான வழக்கு நேற்று கொழும்பு – கோட்டை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு அழைக்கப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முன்னாள் அமைச்சர் லொஹான் ரத்வத்தேவின் சட்டத்தரணி நீதிமன்றில் முன்வைத்த கோரிக்கை மீதான ஆராய்வின் போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு 10 லட்சம் ரூபாவை செலுத்த இணக்கம் காணப்பட்டதாகவும் லொஹான் ரத்வத்தேவின் சட்டத்தரணி நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார்.

இந்த விடயங்களை ஆராய்ந்த நீதவான், கொள்ளுப்பிட்டி வாகன விபத்து வழக்கிலிருந்து லொஹான் ரத்வத்தேவை விடுவிக்கும் உத்தரவை பிறப்பித்துள்ளார்.

# வாய்ப்புற்று நோய் தொடர்பில் பல் வைத்திய சங்கம் எச்சரிக்கை

நாட்டின் சனத்தொகையில் 50 சதவீதமானவர்களே நாள் ஒன்றில் இரண்டு தடவைகள் பல்துலக்குகின்றனர் என இலங்கை பல் வைத்திய சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை பல் வைத்திய சங்கத்தின் பிரதி செயலாளர் வைத்தியர் நிலந்த ரத்னாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

வருடம் ஒன்றில் சுமார் மூவாயிரம் பேர் வாய்புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர். வாய்ப்புற்று நோய் காரணமாக நாள் ஒன்றில் மூன்று பேர் மரணிக்கின்றனர்.

வாய் சுகாதாரம் தொடர்பில் பொதுமக்கள் அக்கறையின்றி செயற்படுகின்றனர்.

இதன் காரணமாக வாய் சார்ந்த நோய்கள் அதிகளவில் ஏற்படுகின்றன.

எனவே, நாள் ஒன்றில் இரண்டு தடவைகள் பல்துலக்கும் முறைமையை கடைப்பிடிக்குமாறு இலங்கை பல் வைத்திய சங்கத்தின் பிரதி செயலாளர் வைத்தியர் நிலந்த ரத்னாயக்க வலியுறுத்தியுள்ளார்.



# ஜீப் சாரதிகளின் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது



யால தேசிய பூங்காவின் ஜீப் சாரதிகள் சிலர் முன்னெடுத்திருந்த எதிர்ப்பு நடவடிக்கை தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

ஜீப் வாகனங்கள் பதிவு செய்யப்படுவதை இரத்து செய்யுமாறு கோரி நேற்று காலை முதல் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனால் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பாதிக்கப்பட்டனர்.

இந்த விடயம் தொடர்பில் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருடன் கலந்துரையாட சந்தர்ப்பம் வழங்கப்படுமென அதிகாரிகள் உறுதியளித்த பின்னர் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது.

யால தேசிய பூங்காவில் இதுவரையில் சபாரிக்காக 550 ஜீப்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும் 100 ஜீப்கள் பதிவு செய்யப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தே போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய கலந்துரையாடலின் பின்னர் உரிய தீர்மானம் எடுக்கப்படுமென யால தேசிய பூங்காவின் பொறுப்பதிகாரி மனோஜ் வித்யாரத்ன தெரிவித்தார்.



# யாழ். மாவட்டத்தில் 17 சபைகளுக்கு 35 தரப்புகளின் வேட்பு மனுக்கள் நிராகரிப்பு; 124 மனுக்களே ஏற்பு!




(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைக்காக சமர்ப்பிக்கப்பட்ட 159 தரப்புகளின் வேட்பு மனுக்களில் 35 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரான ம.பிரதீபன் தெரிவித்தார்.

வேட்புமனுக்கள் ஏற்கும் பணிகள் நிறைவடைந்த பின்னர் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு :-

17 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையில் இடம்பெற்ற வேட்பு மனுத் தாக்கலிலேயே இந்த எண்ணிக்கைகள் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் ஒரு மாநகர சபை, 3 நகர சபைகள், 13 பிரதேச சபைகள் காணப்படுகின்றன. இதிலே மாநகர சபையில் 45 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 12 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இவற்றில் தமிழ் மக்கள் கூட்டணி, ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணி, ஈரோஸ் ஜனநாயக முன்னணி ஆகியவற்றுடன் இரு சுயேச்சைக் குழுக்கள் என ஐந்து தரப்புகளின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

சாவகச்சேரி நகர சபையில் ஜன நாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் இரு சுயேட்சைக் குழு வேட்பு மனுக்களும், வலி.மேற்கு பிரதேச சபையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினதும்,

பருத்தித்துறை பிரதேச சபையில், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ் மக்கள் கூட்டணி, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகிய மூன்று கட்சிகளின தும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

வலி. தெற்கு பிரதேச சபையிலே தமிழ் மக்கள் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி

ஆகிய மூன்று கட்சிகளினதும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

சாவகச்சேரி பிரதேச சபையிலே இரு சுயேச்சைக் குழுக்களின் வேட்பு மனுக் களும், காரைநகர் பிரதேச சபையில் ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியின் வேட்பு மனுவும், ஊர்காவற்றுறை பிரதேச சபையில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வேட்பு மனுவும் நிராகரிக்கப்பட்டன.

இதேபோன்று நெடுந்தீவு பிரதேச சபையில் ஜனநாயக தமிழத் தேசிய கூட்டணியின் வேட்பு மனுவும், வலி. கிழக்கு பிரதேச சபையிலே ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய இரு கட்சிகளின் வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்டன.

வடமராட்சி தென் மேற்கு பிரதேச சபையில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகியவற்றுடன் ஓர் சுயேச்சைக் குழுவின் வேட்பு மனுவும் -

நல்லூர்ப் பிரதேச சபையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஜன நாயக தமிழ் தேசிய கூட்டணி ஆகிய வற்றுடன் ஓர் சுயேச்சைக் குழுவின் வேட்பு மனுவும் நிராக்கப்பட்டன.

வல்வெட்டித்துறை நகர சபையிலே இரு சுயேச்சை குழுக்களின் வேட்பு மனு உள்பட மாவட்டத்தில் 35 மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் 136 கட்சிகளும் 23 சுயேச்சைக் குழுக்களுமாக 159 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இதில் கட்சிகள் சார்பில் 22 கட்சிகளி னதும் ,13 சுயேச்சைக் குழுக்களின தும் வேட்பு மனுக்கள் என 35 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டு எஞ்சிய 124 வேட்பு மனுக்களும் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளன. - என்றார்.

# 103 அரசியல் கட்சிகளும், 3 சுயேச்சைக் குழுக்களும் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடத் தகுதி!

எதிர்வரும் மே மாதம் 06ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்பு மனுக்களை கையளிக்கும் காலம் நேற்று மதியம் 12 மணியுடன் நிறைவடைந்துள்ள நிலையில் திருகோணமலை மாவட்டத் தில் 13 உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவதற்காக 126 அரசியல் கட்சிகளும், 12 சுயேச்சைக் குழுக்க ளும் தமது வேட்பு மனுக்கள் திரு கோணமலை மாவட்ட செயலகத்தில் கையளித்திருந்தன.

இதில் 23 அரசியல் கட்சிகளினதும், 03 சுயேச்சைக் குழுக்களினதும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டு 103 அரசி யல் கட்சிகளினதும், 03 சுயேச்சைக் குழுக்களினதும் வேட்பு மனுக்கள் ஏற் றுக் கொள்ளப்பட்டுள்ளன எனத் திரு கோணமலை மாவட்ட தேர்தல் தெரி வத்தாட்சி அலுவலரும் மாவட்ட செய லாளருமான டபிள்யூ. ஜி.எம்.ஹேமந்த குமார தெரிவித்தார்.



திருகோணமலை மாவட்டத்தில் உள்ள திருகோணமலை மாநகரசபை, கிண்ணியா நகரசபை உள்ளிட்ட 13 உள்ளிராட்சி மன்றங்களுக்கான 129 வட்டாரங்களில் இருந்து 136 பேர் வட்டார ரீதியாகவும், 123 பேர் விகிதாசார அடிப் படையிலும் என மொத்தமாக 259 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர். இதற் காக 103 அரசியல் கட்சிகளும், 03 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட வுள்ளன.




# முல்லைத்தீவில் சட்டவிரோத தொழிலில் ஈடுபட்டவர்களின் வலைகள் பறிமுதல்

(பா.சதீசன்)

வட்டுவாகல் நந்திக்கடல் களப்பு மற்றும் கொக்குளாய், கொக்குத்தொடுவாய் களப்பு பகுதிகளில் சட்டவிரோத தொழில்களில் ஈடுபட்டவர்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த நடவடிக்கையில் நேற்று முன்தினம் வட்டுவாகலில்
50 கூட்டு வலை, 80 நூல் வலை மற்றும் 30 தங்கூசி வலை என்பன கைப்பற்றப்பட்டன. அதன் தொடர்ச்சியான நடவடிக்கையில்

நேற்று கொக்குளாய், கொக்குத்தொடுவாய் களப்பு பகுதிகளில் 150 கூட்டு வலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையானது முல்லைத்தீவு மாவட்ட நீர்வள திணைக்களத்தின் உதவி பணிப்பாளர் மோகன்குமார் தலைமையில், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்ட தலைவர் அ.நடனலிங்கத்தின் வழிநடத்தலிலும், கடற்படையினர், வட்டுவாகல் கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கம், கேப்பாபுலவு கூட்டுறவு சங்கம், முள்ளிவாய்க்கால் கிழக்கு அலையோசை கூட்டுறவு சங்கம், செல்வபுரம் கூட்டுறவு சங்கம், கள்ளப்பாடு சித்திவிநாயகர் சங்கம் ஆகியோரது ஒத்துழைப்புடனும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கை களப்புக்களில் மட்டுமல்ல பெருங்கடலிலும் தொடரும் என முல்லைத்தீவு மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்ட தலைவர் அ.நடனலிங்கம் தெரிவித்துள்ளார்.







## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று அவரது பெயரில் நேரத்தோடு வெளியான செய்தி இவ்விடயத்தில் அவரின் உள்நோக்கத்தை அம்பலப்படுத்துவதாகத் தெரிகிறது.

வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட வேண்டும் என்ற கருத்தோடுதான் அவரின் சார்பில் அவை தாக்கல் செய்யப்பட்டனவோ என்ற சந்தேகம் பலருக்கும் எழாமல் இல்லை.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வதற்கு கட்டுப்பணத்துக்குக் காசு இல்லை என்ற பஞ்சம் கொட்டும் அவர் தரப்பின் கருத்து வெளிப்பாடு, வேட்புமனுக்கள் பொறுப்பற்ற முறையில் தயாரிக்கப்பட்டு கையளிக்கப்பட்டமை போன்றவற்றைக் கூட்டிக் கழித்துப் பார்க்கும் போது அவரது இலக்கும் நோக்கும் சமூகத்துக்கு மருத்துவம் பார்க்கும் வைத்தியருடையவை போல் அல்லாமல், மருத்துவத்தின் பெயரால் அறவீடு செய்து, அள்ளிச் சுத்தும் நோக்கத்தை உடையது போல தெரிகின்றது.

ஜனநாயகத் தமிழ்த் தேசிய முன்னணியை பொறுத்தவரை எப்படி பத்துக்கும் மேற்பட்ட சபைகளை, வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமையால் அவர்கள் கோட்டை விடும் சூழல் உருவானதற்கு சில தலைவர்களின் பொறுப்பற்ற போக்கே காரணம் என்று சந்தேகிக்கத் தோன்றுகின்றது.

வடக்கில் சித்தார்த்தனின் நேரடி கண்காணிப்பில் இடம்பெற்ற மூன்று சபைகளுக்கான வேட்பு மனுக்கள் அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவை நிராகரிக்கப்படவில்லை. கிழக்கிலும் அப்படித்தான். வடக்கில் ஓரிரு தலைவர்களின் மேற்பார்வையில் தயாரிப்பு முன்னெடுக்கப்பட்ட வேட்பு மனுக்கள்தான் அடிபட்டுப் போயிருக்கின்றன. அதுவும் அந்த வேட்பு மனுக்களில் இளையோரின் வயதை உறுதிப்படுத்தும் பிறப்புச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் பற்றிய சர்ச்சையால் விளைந்தது.

நேற்று முன்தினம் யாழ் மாவட்ட செயலகத்தில் தங்களுடைய வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய வந்த ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா அந்தப் பிறப்புச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை எடுத்து வராத காரணத்தினால் வேட்பு மனுவைத் தாக்கல் செய்யாமல் திரும்பிச் சென்றார் என்ற விடயத்தை என்னுடைய பத்தியில் நேற்று தெளிவாக எழுதி இருந்தேன். நேற்று நண்பகலுக்கு இடையில் அவற்றை ஈ.பி.டி.பியினர் தேடிப் பெற்றுக் கொண்டு வந்து சேர்ப்பார்களா என்ற கேள்விக்குறியை எனது நேற்றைய பத்தியில் முத்தாய்ப்பாகக் குறிப்பிட்டு இருந்தேன்.

அதை வாசித்திருந்தால் நேற்றுக் காலை சங்கு கூட்டணியினர் வேட்பு மனுத் தாக்கலுக்கு வரும் போதே அந்தப் பிரச்சினை இருப்பதை உணர்ந்திருப்பார்கள். என்னுடைய பத்தியில் குறிப்பிட்டுச் சுட்டியும் கூட அது பற்றி அவர்கள் சிரத்தை எடுக்காமல் போனமை ஆச்சரியத்துக்குரியதே.

இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பொறுத்த வரை மன்னாரில் மாந்தை மேற்கு பிரதேச சபை வேட்பு மனு நிராகரிக்கப்பட்டு இருக்கின்றது. அதுவும் பெண் வேட்பாளர் ஒருவரின் வேட்பு மனு மற்றும் விடயங்களை சான்றுரைத்த சமாதான நீதிவான் அதில் தாம் சான்றுரைக்கும் திகதி மற்றும் இடங்களைக் குறிப்பிடவில்லை என்ற காரணத்தினால் அந்த நிராகரிப்பு இடம்பெற்று இருப்பதாகத் தெரிகின்றது. அதற்கு எதிராக தமிழரசுக் கட்சி உயர்நீதி மன்றுக்குச் செல்லும் வாய்ப்பு உள்ளது. சமாதான நீதிவானின் சான்றுரைப்பில் இடம் மற்றும் திகதி கட்டாயமானது என்று சட்டத்தில் சொல்லப்படவில்லை எனும் காரணத்தைக் காட்டி, இந்த வேட்பு மனுவையும் ஏற்றுக் கொள்ள வைக்கக் கூடிய வாய்ப்பு தமிழரசுக்கு இருப்பதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணத்தில் மாநகர சபைக்கான தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பு மனு, நல்லூரில் ஐங்கரநேசன் அணியையும் உள்ளடக்கிய தமிழ் காங்கிரஸ் கட்சியின் வேட்பு மனு, வல்வெட்டிதுறையில் தமிழ் மக்கள் கூட்டணியின் ஆதரவு பெற்ற சுயேச்சை குழு போன்றவற்றின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமையும் பல தரப்பையும் ஆச்சரியத்துக்குள் ஆழ்த்தி இருக்கின்றது.

வேட்பு மனுக்களைச் சரியாக நிரப்பக் கூடத் தெரியாத மருத்துவர் அர்ஜுனா போன்றோர், தமிழ் மக்களுக்கு ஏதோ வெட்டிப் பிடுங்கப் போகின்றனர் என்று வெளிநாட்டு அன்றிமார்க் கனவு காண்பது மிகச் சின்னத்தனமானது.

வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட தமிழ் தேசியக் கட்சிகள், தங்களுக்கான நிவாரணத்தை உயர் நீதிமன்றம் மூலம் பெற முடியாமல் போனால், களத்தில் இருக்கும் பிற தமிழ் தேசியக் கட்சிகளுக்கு தங்கள் ஆதரவை பகிரங்கமாக தெரிவிப்பதுதான் பொருத்தமானதாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

---

## சங்கு, மான், சைக்கிள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்தவகையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 9 சபைகளில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்புமனுக்களும், 3 சபைகளில் தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்புமனுக்களும், 2 சபைகளில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்புமனுக்களும், பல சபைகளில் அர்ச்சுனா அணியின் (சுயேச்சைக் குழு) வேட்புமனுக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதனால் மேற்படி தரப்புக்கள் அதிர்ச்சியடைந்துள்ளன.

யாழ். மாவட்டத்தில் அர்ச்சுனா அணி (சுயேச்சைக் குழு) தாக்கல் செய்த வேட்பு மனுக்களில் பருத்தித்துறை நகர சபைக்கான வேட்புமனு மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மற்றும் நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பான முழுமையான விவரத்தை யாழ். மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் மருதலிங்கம் பிரதீபன் அறிவித்துள்ளார்.

வேட்புமனுத் தாக்கல் மற்றும் பரிசீலனை நடவடிக்கைகளுக்குப் பின்னர் நேற்று மாலை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதன்படி, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இம்முறை தேர்தலுக்காக 148 கட்சிகளும், 27 சுயேச்சைக் குழுக்களும் கட்டுப்பணத்தைச் செலுத்தியிருந்தன.

இதில் 136 கட்சிகளும், 23 சுயேச்சைக் குழுக்களும் வேட்புமனுப் பத்திரத்தைத் தாக்கல் செய்திருந்தன.

அவற்றில் 22 கட்சிகளுடைய வேட்புமனுப் பத்திரங்களும், 13 சுயேச்சைக் குழுக்களுடைய வேட்புமனுப் பத்திரங்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாநகர சபைக்கான வேட்புமனுவில் தமிழ் மக்கள் கூட்டணி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, ஈரோஸ் ஜனநாயக முன்னணி, ஆகிய கட்சிகளுடைய வேட்புமனுக்களும், ஞானப்பிரகாசம் சுலக்சன், நரேந்திரன் கௌசல்யா ஆகியோர் தலைமையிலான சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறை நகர சபைக்கான வேட்புமனுவில் இராமச்சந்திரன் சுரேன், யோகேஸ்வரி அருளானந்தம் ஆகியோர் தலைமையிலான சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை நகர சபைக்கான வேட்பு மனுவில் அனைத்து வேட்புமனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

சாவகச்சேரி நகர சபைக்கான வேட்பு மனுவில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி கட்சியினுடைய வேட்புமனுவும், மகாலிங்கம் சதீஸ், பெரியான் சிவகுருநாதன் ஆகியோர் தலைமையிலான சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

காரைநகர் பிரதேச சபைக்கான வேட்பு மனுவில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கான வேட்புமனுவில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பிரதேச சபைக்கான வேட்பு மனுவில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

வேலணைப்பிரதேசசபைக்கானவேட்பு மனுவில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து வேட்புமனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கான வேட்புமனுவில், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி கட்சியினுடைய வேட்பு மனுவும், துரைராஜா சுஜிந்தன் தலைமையிலான சுயேச்சைக் குழுவின் வேட்பு மனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கான வேட்புமனுவில், சவரிமுத்து ஸ்டாலின் தலைமையிலான சுயேச்சைக் குழுவின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்கான வேட்புமனுவில், ஸ்ரீலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கான வேட்புமனுவில், தமிழ் மக்கள் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கான வேட்புமனுவில், மக்கள் போராட்ட முன்னணி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபைக்கான வேட்புமனுவில், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளின் வேட்பு மனுக்களும், தவம் தவனிலாவின் தாசன் தலைமையிலான சுயேச்சைக் குழுவின் வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை பிரதேச சபைக்கான வேட்புமனுவில், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், தமிழ் மக்கள் கூட்டணி, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளின் வேட்புமனுக்களும், அல்பிரட் ரெஜி ராஜேஸ்வரன் தலைமையிலான சுயேச்சைக் குழுவின் வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பிரதேச சபைக்கான வேட்பு மனுவில், வைத்தியலிங்கம் ஜெகதாஸ் தலைமையிலான சுயேச்சைக் குழுவும், குணரட்ணம் குகானந்தன் தலைமையிலான சுயேச்சைக் குழுவும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

நல்லூர் பிரதேச சபைக்கான வேட்பு மனுவில், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகிய கட்சிகளின்

07

# எமது சுயேட்சை குழு நிராகரிக்கப்பட்டால் கஜேந்திரகுமாருக்கு வாக்களியுங்கள்

## நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் தெரிவிப்பு




எமது சுயேட்சை குழு நிராகரிக்கப்பட்டால், கஜேந்திர குமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணியினருக்கு வாக்களியுங்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் அர்ச்சுனா இராமநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுக்களை நேற்று வியாழக்கிழமை கையளித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளில் 11 சபைகளுக்கே வேட்பு மனுக்களை கையளித்துள்ளோம். ஏனைய தீவகம் உள்ளிட்ட 06 சபைகளில் போட்டியிடவில்லை.

யாழ். மாநகர சபை வேட்பு மனு சிலவேளைகளில் நிராகரிக்கப்படலாம். அவ்வாறு நிராகரித்தால் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கட்சிக்கே எமது ஆதரவை வழங்குவோம். அவர்களுக்கே வாக்களிக்குமாறு கோருவோம்.

தற்போதுள்ள தமிழ் தலைமைகளில் கஜேந்திரகுமார் பொன்னம்பலமே விலை போகாதவராக இருக்கின்றார் எனவே அவருக்கே எமது ஆதரவை வழங்குவோம்.

ஆட்சியில் உள்ளவர்கள் எம்மை பார்த்து பயப்படுகின்றனர். நான் நாடாளுமன்றத்தில் கூறாத விடயத்தை கூறியதாக கூறி எனது உரைகளை ஒளிபரப்ப தடை விதித்துள்ளார்கள்.

அதேபோன்று எனக்கு பாதுகாப்பு வழங்குமாறு நான் கோரிய போதிலும் எனக்கான பாதுகாப்பு வழங்கப்படவில்லை.

ஆனால் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்கியுள்ளனர். எனது உயிருக்கு சிறுபான்மை இனத்தவர்களால் அச்சுறுத்தல் இருக்கிறது." என்றார்.

# வாகன விபத்தில் 2 பெண்கள் பலி!

காலி,நெலுவ – பெலவத்தை வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நெலுவையில் இருந்து பெலவத்தை நோக்கிச் சென்ற லொறியும், பெலவத்தையில் இருந்து நெலுவ நோக்கிச் சென்ற ஓட்டோவும்

ஹத்தே கணுவ பகுதியில் நேருக்கு நேர் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நெலுவ களுபோவிட்டியாவ பகுதியில் வசிக்கும் 55 மற்றும் 27 வயதுடைய இரு பெண்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பலூன் வெடித்து சிறுவன் மரணம்

பலூன் துண்டு ஒன்று தொண்டையில் சிக்கியதால் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காலி – நெலுவ பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 11 வயதுடைய சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பெற்றோர் வீட்டில் இருந்தபோது, மேற்படி சிறுவன் பலூனை வைத்து விளையாடிக்கொண்டிருந்தார் எனவும், இதன்போது பலூன் வெடித்து அதில் ஒரு துண்டு சிறுவனின் தொண்டையில் சிக்கியுள்ளது எனவும் கூறப்படுகின்றது.

இதன் காரணமாக அந்தச் சிறுவன் நெலுவ – மெதகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பதவி விலகினார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விலகியுள்ளார்.

அதற்கமைய, அவர் தனது பதவி விலகல் கடிதத்தைப் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

தனது தனிப்பட்ட காரணங்களுக்காக அவர் இந்தப் பதவியில் இருந்து விலகியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி இலங்கை பொலிஸ் ஊடகப் பிரிவின் பணிப்பாளராகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளராகவும் அவர் தனது பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## சங்கு, மான், சைக்கிள்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வேட்புமனுக்களும், திலீப் தீபாரஞ்சன் தலைமையிலான சுயேச்சைக் குழுவின் வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தமது வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடருவோம் என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 9 உள்ளூராட்சி சபைகளில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

அது தொடர்பில் அந்தக் கூட்டணியின் சார்பில் ஊடகங்களுக்குச் சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கும்போது,

"யாழ். மாவட்டத்தில் உள்ள இரண்டு சபைகளைத் தவிர ஏனைய 15 சபைகளுக்குமான வேட்புமனுக்களை நாம் கையளித்திருந்தோம். அவற்றில் பல சபைகளில் எமது வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

வேட்புமனுவில் 35 வயதுக்கு உட்பட்டவர்களின் பிறப்புச் சான்றிதழ்களில் சில போட்டோ பிரதிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் கையளிக்கப்படவில்லை எனும் காரணத்தால் அவை நிராகரிக்கப்பட்டதாக எமக்குக் கூறப்பட்டுள்ளது.

அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள்தான் கையளிக்கப்பட்ட வேண்டும் எனக் கடந்த 15ஆம் திகதி ஊடக அறிக்கை ஒன்றின் ஊடாகவே அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தற்போது கூறுகின்றார்கள்.

ஆனால், அது தொடர்பில் எமக்கு உரிய முறையில் அறிவிக்கப்படவில்லை. இவை திட்டமிட்ட முறையில் எம்மை நிராகரிக்கச் செய்யப்பட்ட ஏற்பாடாகவே பார்க்கின்றோம்.

வடக்கு, கிழக்கில் எம்மை ஓரம் கட்டி விட்டு ஆளும் கட்சி உள்ளிட்ட சில கட்சிகளை மாத்திரம் தேர்தலில் போட்டியிட வைக்கும் செயற்பாட்டைத் தேர்தல் திணைக்களம் செய்துள்ளதாகவே நாம் சந்தேகிக்கின்றோம்.

இது தொடர்பில் நாம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம்." – என்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

## தமிழரசே தமிழரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்துக் கூறும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அதேவேளை, "யாழ்ப்பாணத்தில் பல கட்சிகளின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக அந்தக் கட்சியினர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரத் தங்களை அணுகினால் அது தொடர்பில் வழக்குத் தொடர தாங்கள் தயாரா?" என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோது,

"நான் ஒரு கட்சியின் பொதுச்செயலாளராக உள்ளமையால் வேறு கட்சிகளுக்காக இந்த வழக்குகளில் முன்னிலையாக மாட்டேன்." – என்று சுமந்திரன் பதில் அளித்தார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நீதிமன்றின் களத்துக்குள் தேர்தல்

இரண்டு வருடங்களுக்கு மேலாக நடத்தப்படாமல் இழுபட்டு வந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை மீண்டும் வேட்புமனுக்களைக் கோரி, ஏற்று நடத்துவதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடக்கின்றன.

மீண்டும் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை நேற்றுடன் பூர்த்தியாகிவிட்டது. அடுத்த 46 நாள்களில் - அதாவது மே மாத மாதம் 6 ஆம் திகதி - இந்தத் தேர்தல் நடைபெறும் எனத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

ஆயினும் வரும் திங்கட்கிழமைக்குப் பின்னர் எஞ்சியிருக்கும் ஆறு வாரங்களும் இந்த விவகாரம் - தேர்தல் சர்ச்சை - நீதிமன்றத்திலும் சூடாக எதிரொலிக்கும் எனத் தெரிகின்றது.

தமிழர் பிரதேசத்தில் பல கட்சிகள் மற்றும் குழுக்களின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக அத்தரப்புகள் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுச் சமர்ப்பித்து நிவாரணம் பெறுவதற்குத் துடியாய்த் துடிக்கின்றன என்று தெரிகின்றது.

தேர்தல் ஒழுங்கு விதிகள் தொடர்பாக தேர்தல் ஆணையத்தின் வியாக்கியானத்தில் திருப்திப்படாத தரப்புக்கள் இந்த வழக்குகளை தாக்கல் செய்வதற்குத் தயாராகி வருகின்றன.

விடயம் நீதிமன்றுக்கு செல்ல இருப்பதால், அதில் உள்ள சரி பிழைகள் பற்றி இப்போது நாங்கள் விமர்சிப்பது அல்லது கருத்து வெளியிடுவது பொருத்தமாக இருக்காது.

எனினும் தமிழர் பிரதேசத்தில் பல டசின் கணக்கான வேட்பு மனுக்கள் - குறிப்பாகப் பல கட்சிகளின் வேட்பு மனுக்கள் - நிராகரிக்கப்பட்டமை பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருக்கின்றன என்பது உண்மை தான்.

ஆயினும், அவை எல்லாவற்றுக்கும் நீதிமன்றின் மூலம் நிவாரணம் கிடைக்குமா என்பது கேள்விக்குறியே.

ஆயினும் வடக்கிலிருந்தும் மலையகத்திலிருந்தும் பல கட்சிகளும் தரப்புக்களும் தத்தமது வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்து நீதிமன்றுக்குச் செல்வதற்கு முடிவு செய்துவிட்டன. அதற்கு முழு மூச்சில் அவை தயாராகி வருகின்றன என்று செய்திகள் கிடைத்துள்ளன.

உரிய சட்ட ஆவணங்களைத் தயார் செய்து, அடுத்த வாரத்திலேயே அவை நீதிமன்றுக்குச் செல்லக்கூடியதாக இருக்கும்.

இப்படி வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் பல டசின் கணக்கில் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டால் அடுத்து வரும் வாரங்களில் அந்த வழக்குகளை கையாள்வதிலேயே உயர்நீதிமன்றத்தின் நேரம் போய்விடும் என்று தோன்றுகின்றது.

சிலசமயங்களில்முறைப்பாட்டாளர்களின் விண்ணப்பங்களை ஏற்று, பல உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை தற்காலிகமாக ஒத்திவைக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

வேட்பு மனுத் தாக்கல் தொடர்பாக தேர்தல் ஆணையம் வெளியிட்ட ஒழுங்கு விதிகளின் வியாக்கியானம் தொடர்பில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு நிலைமையே இந்தக் குழப்பங்களுக்குப் பிரதான காரணம் என்று கூறப்படுகின்றது.

அவற்றின் - அந்த ஒழுங்கு விதிகளின்-வியாக்கியானத்தில்உயர்நீதிமன்றம் தலையிடுமா? வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட தரப்புகளுக்கு நீதி, நியாயம் கிடைக்கும் விதத்தில் உத்தரவுகளை உயர்நீதிமன்றம் விடுக்குமா? -என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

பல சபைகளின் தேர்தல் விவகாரம் இப்போது உயர்நீதிமன்றக் களத்துக்குள் விளையாடப்படும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.




# வேட்புமனுத் தாக்கலில் தாம் இழைத்த தவறுக்கு தேசிய மக்கள் சக்தியின் மீது குற்றம் சுமத்துவதா?

## சீறுகின்றார் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன்

(எஸ்.நிதர்ஷன்)

வேட்புமனுத் தாக்கலில் தாங்கள் இழைத்த தவறுக்கு எங்கள் மீது குற்றம் சுமத்த வேண்டாம்.

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட அமைப்பாளரும் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

யாழிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்ககான வேட்புமனுத் தாக்கலின் போது குளறுபடிகள் அல்லது சதி நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கின்றன என்ச் சில தரப்புக்கள் முன்வைத்த குற்றச்சாட்டிற்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாண உள்ளூராட்சி மன்ற தேர்தல் வேட்பு மனுத் தாக்கலின் போது முறைகேடு நடந்துள்ளதாக கூறப்படுவதில் எந்தவித உண்மையும் இல்லை.

ஏனெனில் சிலரது குற்றச்சாட்டை பார்க்கிற போது அவர்களின் வேட்பு மனுத் தயாரிப்பில் அவர்களின் அலுவலகங்களிற்கு நாங்கள் சென்று ஏதோ திருகுதாள வேலைகளைச் செய்தமை போல அவர்களது குற்றச்சாட்டுக்களில் தெரிகிறது.

இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் வெற்றுக் கதைகள் மட்டும்தான். ஆகவே வெறும் கதைகளை யாரும் கதைக்கத் தேவையில்லை. எங்கள் மீது தேவையற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைக்க வேண்டாம்.

இந்த வேட்பு மனுக்களை தாக்கல் செய்கின்ற முறைமைகள் தொடர்பாகவும் என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பாகவும் சகலருக்கும் பல்வேறு அறிவுறுத்தல்களும் ஏற்கனவே வழங்கப்பட்டு உள்ளன.

இந்த விடயங்கள் எல்லோருக்குமே நன்றாகதெரியும்.சாதாரணமாககா.பொ.த. உயர்தரம் படிக்கின்ற ஒரு மாணவரிடம் கேட்டால் கூட இதுதான், இப்படிதான் என தெளிவாக சொல்லுகின்ற போது இவர்களுக்கு தெரியாமல் இருப்பதென்பது இவர்களிடத்தே அக்கறையில்லை என்பதையே காட்டுகிறது.

ஆகையினால் தாங்கள் தவறுகளை இழைத்துவிட்டு எங்கள் மீது குற்றஞ் சாட்டுகின்ற இந்த மாதிரியான கூற்றுக்கள் குறித்து நாங்கள் அலட்டிக் கொள்ளப்போவதில்லை.

நாங்கள் அவர்களுக்கு தயவு செய்து கூறிக் கொள்வது தங்களது இயலாமையை மறைப்பதற்கு தேசிய மக்கள் சக்தியை பயன்படுத்த கூடாது என்பதைத்தான்.

இருந்த போதிலும் இங்குள்ள ஒரு சபை கூட நிராகரிக்கப்படாமல் 17 சபைகளிலும் சரியாக செய்து தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றிருப்பதென்பதை இவர்களால் பொறுத்துக் கொள்ளவோ சகித்துக் கொள்ளவோ முடியவில்லை.

அதனாலேயே தேவையில்லாத விமர்சனங்களை செய்கின்றனர். எது எப்படியாயினும் எங்களுடைய வெற்றி உறுதியானது. இந்த வேட்புமனுத் தாக்கலில் இருந்தே அதை ஆரம்பித்திருக்கிறோம். – என்றார்.

# ஹசீஸ் போதைப்பொருளுடன் கொழும்பு 12 இல் ஒருவர் கைது

19 கிலோ கிராமுக்கும் அதிக ஹசீஸ் போதைப்பொருளுடன் கொழும்பு 12 இல் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடற்படையினரும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரும் இணைந்து வீடொன்றில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போதே கொழும்பு 12 ஐ சேர்ந்த 31 வயதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரின் வீட்டிலிருந்து 348 கிராம் ஹெரோயின் மற்றும் 4 கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டன.

இந்த போதைப்பொருளின் பெறுமதி 153 மில்லியன் ரூபாவை விட அதிகம் என கடற்படை தெரிவித்தது.

இதேவேளை, மாத்தறை – திக்வெல்ல உருகுமுவ பகுதியில் 33 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் 42 வயதான ஒருவர் கைதாகியுள்ளார்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் முன்னெடுத்த சோதனையின் போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

# 18 அரசியல் கட்சிகள், எட்டு சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்கள் நுவரெலியா மாவட்டத்தில் நிராகரிப்பு

## தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி தகவல்



(க.கிஷாந்தன்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக நுவரெலியா மாவட்டத்தில் சமர்ப்பிக் கப்பட்ட 18 அரசியல் கட்சிகள் மற்றும் 8 சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக் கள் நிராகரிக்கப்பட்டன என நுவரெலியா மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதி காரி தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் 12 உள்ளூ ராட்சி மன்றங்களுக்கு 110 தரப்புகளின் வேட்புமனுக்கள் பெறப்பட்டன எனவும், அவற்றில் 18 அரசியல் கட்சிகள் மற் றும் 8 சுயேச்சைக் குழுக்களின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன எனவும், 97 அரசியல் கட்சிகள் மற்றும் 13 சுயேச்சைக் குழுக்களின் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன எனவும் நுவரெலியா மாவட்டத் தேர் தல் தெரிவத்தாட்சி அலுவலர் துஷாரி தென்னகோன் தெரிவித்தார்.

வேட்புமனுக்களை ஏற்றுக்கொண்ட பின்னர் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே திரு மதி துஷாரி தென்னகோன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அத்தோடு, கொத்மலை, மஸ்கெ லியா பிரதேச சபைகளுக்கான இ.தொ. காவின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப் பட்டுள்ளன.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் போட்டி யிடுவதற்கான வேட்புமனுக்களை இ.தொ.காவின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் நேற்றுத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த நிலையில், கொத்மலை, மஸ்கெலியா பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்களில் காணப்பட்ட முரண் கள் காரணமாக அவை நிராகரிக்கப் பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படு கின்றது.







# முல்லைத்தீவு மாவட்டத்தில் 34 தரப்புகளினுடைய வேட்புமனுக்கள் ஏற்பு; நான்கு மனுக்கள் நிராகரிப்பு



(பா. சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் நான்கு பிரதேச சபைகளில் போட்டி யிடுவதற்காக 44 அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் கட்டுப் பணம் செலுத்தின.

நேற்றைய தினம் நண்பகல் 12.00 மணியுடன் வேட்புமனுதாக்கல் நிறை வுக்கு வந்தது. இதனடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் அடங்கலாக 38 அணிகள் வேட்புமனுத் தாக்கல் செய்தன.

கரைதுறைப்பற்று பிரதேச சபை யில் போட்டியிடுவதற்காக 10 கட்சி களும் 2 சுயேச்சைக் குழுக்களும் வேட்புமனுக்கள் தாக்கல் செய்தமை யோடு புதுக்குடியிருப்பு பிரதேச சபை யில் போட்டியிடுவதற்காக 7 கட்சிக– ளும் 3 சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்தன.

மேலும் துணுக்காய் பிரதேச சபை யில் போட்டியிடுவதற்காக 6 கட்சி களும் 2 சுயேச்சைக் குழுக்களும் வேட்புனு தாக்கல் செய்தன. மாந்தை கிழக்கு பிரதேச சபையில் போட்டியிடு வதற்காக 6 ஆறு கட்சிகளும் 2 சுயேச்சைக் குழுக்களும் வேட்புமனுத் தாக்கல் செய்தன.

இதில் மொத்தமாக 38 அணிகள் வேட்புமனு தாக்கல் செய்தமையுடன் அவற்றில் 34 அணிகளின் வேட்பு மனுக்க ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

4 அணிகளின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதில் புதுக் குடியிருப்பு பிரதேச சபையில் 2 சுயேச் சைக் குழுக்களினதும், கரைதுறைப் பற்று பிரதேச சபையில் போட்டியிடும் 2 அரசியல் கட்சிகளினதும் வேட்பு மனுக்களே நிராகரிக்கப்பட்டுள்ளன. பொதுஜன ஐக்கிய பெரமுன கட்சி, ஸ்ரீலங்கா மகஜன பக்சய ஆகிய கட்சிகளின் வேட்புமனுக்கள் நிரா கரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலானது எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி நடை பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.




# வவுனியாவில் 103 உறுப்பினர்களைத் தெரிவுசெய்ய மொத்தம் 1,231 வேட்பாளர்கள் தேர்தல் களத்தில்!

(கி.வசந்தன்)

எதிர்வரும் மே மாதம் நடைபெற வுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வவுனியா மாவட்டத்தில் 103 உறுப்பி னர்களை தெரிவு செய்வதற்காக 1,231 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர் என மாவட்ட அரச அதிபரும் தேர் தல் தெரிவத்தாட்சி அலுவலருமான பி.ஏ.சரத்சந்திர தெரிவித்தார்.

நேற்று மாலை வேட்புமனுக்கள் ஏற்கும் பணிகள் நிறைவடைந்த பின் னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் கடந்த 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு வியாழன் மதியம் 12 மணியவளவில் நிறைவுக்கு வந்திருந்தது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள ஐந்து உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடவுள்ள கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்கள் மாவட்ட செயல கத்தில் அமைந்துள்ள தேர்தல் அலு வலகத்தில் வேட்புமனுக்களை தாக்கல் செய்திருந்தன.

**மாநகரசபை**

இதுவரை நகரசபையாக இருந்து தரமுயர்த்தப்பட்ட வவுனியா மாநகர சபைக்கு முதலாவது தேர்தலாக இது அமைந்துள்ளது. இம்முறை மாநகர சபையில் மொத்தமாக 20 உறுப்பி னர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். அதற்காக 10அரசியல் கட்சிகளும், 2 சுயேடச்சைக் குழுக்களும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்திருந்தன. அவற்றில் மக்கள் போராட்ட முன்னணி யின் வேட்பு மனு முழுமையாக நிரா கரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியில் வேட்பாளர் ஒருவர் நிராகரிக்கப்பட்டுள்ளார். அதன்படி 11 தரப்புக்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

**தெற்கு தமிழ் பிரதேச சபை**

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு 26 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். அதற்காக 12 அரசியல் கட்சிகளும் 4 சுயேச்சைக் குழுக்களும் வேட்புமனுக்களைத் தாக் கல் செய்திருந்தன. அவற்றில் ஜனநாய கத் தமிழ்த் தேசியக் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஒரு சுயேச்சை குழுவின் வேட்புமனுக்கள் நிராகரிக் கப்பட்டுள்ளன. 13 தரப்புக்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளன..

**செட்டிகுளம் பிரதேச சபை**

வெண்கல செட்டிகுளம் பிரதேச சபைக்கு 18 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்னர். அதற்காக 10 அரசியல் கட்சிகளும் 2 சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்திருந்த நிலையில் விண்ணப்பித்த 12 தரப்புக்களின் வேட்பு மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

**வடக்கு பிரதேச சபை**

வவுனியா வடக்கு பிரதேசசபை யில் 23 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். அதற்காக 09 அரசியல் கட்சிகளும், 02 சுயேச்சைக் குழுக்களும் வேட்புமனுக்களை தாக்கல் செய்திருந்தன. அவற்றில், இரண்டு சுயேச்சைக் குழுக்களின் விண்ணப்பங் கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. 9 தரப்பு-க்களின் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள் ளப்பட்டன.

**சிங்கள பிரதேச சபை**

வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையில் 16 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். அதற்காக 07 அரசியல் கட்சிகளும், 2 சுயேச்சைக் குழுக்களும் வேட்புமனுக்களைத் தாக் கல் செய்திருந்த நிலையில் அவை அனைத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

அந்தவகையில் வவுனியா மாவட் டத்தில் உள்ள ஐந்து உள்ளூராட்சி சபைகளில் 103 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 1,231 வேட்பா ளர்கள் களத்தில் குதித்துள்ளனர்.

இதேவேளை உள்ளூராட்சி தேர்த லில் போட்டியிடுவதற்காக 71 தரப்புக்கள் கட்டுப் பணத்தினை செலுத்தியிருந்தன. அவற்றில் 11 தரப்புக்கள் வேட்புமனுக் களை கையளித்திருக்கவில்லை. இத் தேர்தலில் வவுனியா மாவட்டத்தில் 129,293 வாக்காளர்கள் வாக்களிப்ப தற்குத் தகுதி பெற்றுள்ளனர். - எனத் தெரிவித்தார்.

# முல்லைத்தீவில் இடியன் துப்பாக்கியுடன் ஒருவர் கைது



(பா.சதீசன்)

சட்டவிரோத இடியன் துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன் தினம் மாலை கேப்பாபிலவுப் பகுதியில் கைது செய்யப்பட்டார்.

கேப்பாபிலவு பகுதியில் குடும்ப பிணக்குக் காரணமாக ஏழு நாள் தடுப்புக்காவலில் இருந்து விடுதலையாகி நேற்றையதினம் வீடு வந்து மது அருந்திவிட்டு, சட்டவிரோதத் துப்பாக்கியை வைத்து மனைவியுடன் நேற்று முன்தினம் இரவு இவர் சண்டையிட்டுள்ளார்.

இது தொடர்பாக முள்ளியவளை பொலிஸா ருக்குக் கிடைத்த தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சட்டவிரோத இடியன் துப்பாக்கியை வைத்திருந்த குடும்பஸ் தரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட குடும்பஸ்தர் நேற்றைய தினம் முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்தப்பட் டார். எதிர்வரும் 14 நாள்களுக்கு - அதாவது ஏப்ரல் 2 ஆம் திகதி வரை அவரை விளக்க மறி யலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களை முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கேப்பாபிலவுப்பகுதியில்வசிக்கும்36வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு கைது செய்யப்பட்டவ ராவார்.




# மட்டக்களப்பில் 17 வேட்புமனுக்கள் நிராகரிப்பு 101 தரப்புகளின் வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டன

## உதவித் தேர்தர் ஆணையாளர் எம்.பி. எம். சுபியான் தெரிவிப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 12 உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பதிவு செய்யப்பட்ட கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் என 139 தரப்புகளினால் கட்டுப்பணம் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் 118 தரப்புகளே வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தன. இதில் 17 தரப்புகளின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. 101 தரப்புகளின் வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன என மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் எம். பி.எம்.சுபியான் தெரிவித்தார்

மட்டக்களப்பு பழைய கச்சேரி மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்று ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

மாவட்டத்தில் 2 நகரசபைகள், ஒரு மாநகரசபை, 9 பிரதேச சபைகள் என 12 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்களே ஏற்றுக்கொள்ளப் பட்டன

கோறளைப்பற்று வடக்கு சபையில் சர்ஜன அதிகாரம். கட்சி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடைய வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

ஏறாவூர் பற்று பிரதேச சபையில் விநாயகமூர்த்தி விஜயராஜா தலைமையிலான சுயேச்சைக் குழு மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரு வேட்பாளரின் வேட்புமனு ஆகியன நிராகரிக்கப்பட்டன.

ஏறாவூர் நகர சபைக்கு 10 அரசியல் கட்சிகள், ஒரு சுயேச்சைக் குழு என 11 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. அவை அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபைக்கு 7 அங்கீகரக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் 2 சுயேச்சைக் குழுக்களுமாக 9 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

போரதீவுப்பற்று பிரதேசசபையில் 5 கட்சிகள் வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தன. இதில் ஐக்கிய மக்கள் சக்தி வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது. அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் சிவனேசராசா ஒளிர்வளசுதன் மற்றும் அரசஅரத்தினம் சப்ததவதீஸ் ஆகிய இரு வேட்பாளர்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாநகரசபைக்கு 9 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், ஒரு சுயேச்சைக் குழு என 10 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இதில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசிய கட்சி ஆகிய தரப்புகளுடைய வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. ஐக்கிய மக்கள் சக்த்தியின் கருணாநிதி தர்சிகா என்பவருடைய வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

மண்முனைபற்று பிரதேச சபைக்கு 11 கட்சிகளும், 7 சுயேச்சைக் குழுக்களுமாக 18 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி மற்றும் சோமசுந்தரம் மகேந்திரன், கிருஷ்ணபிள்ளை கியானர் மற்றும் செல்லத்துரை தங்கவேல் ஆகியோர் தலைமையிலான சுயேச்சைக் குழுக்கள் ஆகிய தரப்புகளின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

நல்லதம்பி சுரேந்திரன் தலைமையிலான சுயேச்சைக் குழுவில் திலகவதி சுரேந்தின், குணசுந்தரம் திவாகர், வடிவேல் பவழக்கொடி ஆகியோரது வேட்புமனுக்க நிராகரிக்கப்பட்டன.

கோரளைப்பற்று பிரதேசசபைக்கு 8 கட்சிகளும், 3 சுயேச்சைக்குழுக்களும் என 11 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இதில் விமலசேன லவக்குமார் மற்றும் குணரத்தினம் புலேந்திரன் தலைமையிலான சுயேச்சைக் குழுக்கள் இரண்டினதும் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் பட்டியலில் செல்லத்தம்பி விமலராஜ் என்பவரது வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபைக்கு 10 கட்சிகளும் ஒரு சுயேச்சைக் குழு என 11 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த அனைத்து வேட்பு மனுக்களும் ஏற்கப்பட்டுள்ளன.

காத்தான்குடி நகரசபையில் 7 அரசியல்கட்சிகளும் 3 சுயேச்சைக் குழுக்களும் என 10 வேட்புமனுக்கள் தாக்கலாகின். இதில் சர்வஜன அதிகாரம் கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டது.

மண்முனை மேற்கு பிரதேச சபைக்கு 7 அரசியல்கட்சிகள் சார்பில் தாக்கலான வேட்புமனுக்கள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

மண்முனை தென்மேற்கு பிரதேச சபைக்கு 5 கட்சிகளும் ஒரு சுயேச்சைக் குழு என 6 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இதில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் மொத்தமாக 4 லட்சத்து 55 ஆயிரத்து 520 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். 444 வாக்களிப்பு நிலையங்களில் வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

12 உள்ளூராட்சி மன்றங்களின் 144 வட்டாரங்களில் இருந்து 146 பேரும் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தில் பட்டியலில் இருந்து 128 பேருமாக மொத்தமாக 274 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளார்கள். - என்றார்.



# சத்தீஸ்கர் ‘என்கவுன்டர்களில்’ 22 பிரிவினைவாதிகள் பலி

சத்தீஸ்கரில் உள்ள பஸ்தார் பிரிவின் பிஜாப்பூர் மற்றும் கான்கர் மாவட்டங்களில் நேற்று நடந்த தனித்தனி மோதல்களில் குறைந்தது 22 பிரிவினைவாதிகள் ‘என்கவுன்டரில்’ கொலலப்பட்டுள்ளனர்.

அதேநேரத்தில், துப்பாக்கிச் சூட்டில் ஒரு பாதுகாப்புப் படை வீரரும் உயிழுந்துள்ளார்.

கிளர்ச்சியால் பாதிக்கப்பட்ட பிஜாப்பூரில் 18 பிரிவினைவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மேலும் எண்ணிக்கை 20 ஆக உயரக்கூடும் என்று வட்டாரங்கள் தெரிவித்தன.

பீஜாப்பூர் என்கவுன்டர் நடந்த இடத்தில் இருந்து ஆயுதங்கள் மற்றும் வெடி பொருள்களுடன் 18 உடல்களையும், கான்கர் மற்றும் நாராயண்பூர் மாவட்டங்களின் எல்லைகளில் உள்ள காடுகளில் இருந்து நான்கு உடல்களையும் பாதுகாப்புப் படையினர் மீட்டுள்ளனர்.

பிஜாப்பூர் மற்றும் தண்டேவாடா மாவட்டங்களின் எல்லையில் உள்ள காடுகளில் இன்னும் என்கவுண்டர் நடந்ததாக பஸ்தர் பொலிஸார் தெரிவித்தனர்.

பிஜாப்பூரில் உள்ள கங்கலூர் பகுதியில் பிரிவினைவாதிகள் எதிர்ப்பு நடவடிக்கையில் பாதுகாப்புப் படையினரின் கூட்டுக் குழு சென்றபோது, கிளர்ச்சியாளர்கள் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

அதற்குப் படையினரும் பதிலடி கொடுத்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். காலை 7 மணி முதல் பரஸ்பர துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது.

காட்டில் மூத்த பிரிவினைவாதிகள் போராளிகள் குழுவை படைகள் சுற்றி வளைத்தனர் எனவும் பிற்பகலில் மேலும் உயிரிழப்புகள் அதிகரித்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# விவசாயிகள் கைது; அரியானாவில் பதற்றம்






இந்தியாவின், அரியானாவில் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளைப் பொலிஸார் வலுக்கட்டாயமாகக் கைது செய்துள்ளதால் அங்கு பரபரப்பான சூழல் ஏற்பட்டுள்ளது.

அரியானா மற்றும் பஞ்சாப்பை ஒட்டிய ஷம்பு எல்லை பகுதியில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு இருந்தனர். இந்நிலையில், பஞ்சாப் பொலிஸார் நேற்று முன்தினம் மாலை அந்த பகுதிக்கு சென்று போக்குவரத்துக்கு தடையாக இருந்த தடுப்பான்களை அகற்றியதோடு, புல்டோசர்களைகொண்டும் அவற்றை இடித்துத் தள்ளினர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் காலவரையற்ற உண்ணா விரதபோராட்டத்தில்ஈடுபட்டிருந்தமுக்கிய விவசாய தலைவர்களான ஜெகஜீத் சிங் தல்லேவால், சர்வன் சிங் பாந்தர் உள்ளிட்டோரை பொலிஸார் வலுக்கட்டாயமாகக் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், ஷம்பு எல்லையில் நேற்று காலை அதிக அளவில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, விவசாயிகள் முன்னெடுத்து வரும் போராட்டம் எதிரொலியாக, உள்ளூர் வர்த்தகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சூதாட்ட செயலிகளை விளம்பரப்படுத்திய பிரபல நடிகர்கள் மீது சட்ட நடவடிக்கை

சூதாட்ட செயலிகளை விளம்பரப்படுத்தியதாகத் தெரிவித்து பிரபல நடிகர்களுக்கு எதிராக இந்திய பொலிஸ் வழக்குப் பதிவு செய்துள்ளது.

நடிகர்களான பிரகாஷ்ராஜ், ராணா டகுபதி , விஜய் தேவரகொண்டா மற்றும் நடிகைகள் மஞ்சு லட்சுமி, நிதி அகர்வால் உள்ளிட்ட 25 பேர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.



கடந்த ஆண்டு சட்டவிரோத சூதாட்டம் செயலிகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரவு அளிப்போர் மீது நடவடிக்கை எடுக்கும்படி இந்தியாவின் நுகர்வோர் துறை அமைச்சு உத்தரவிட்டு இருந்தது.

இணையவழி மூல விளம்பரங்களுக்கும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் சூதாட்ட செயலிகளை விளம்பரப்படுத்தியதற்காக இந்த நடிகர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# காஸாவில் தொடரும் இஸ்ரேலின் தாக்குதல்கள்; 71 பேர் உயிரிழப்பு

காஸாவில் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் இதுவரையில் 61,700 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர் என காஸா ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காஸாவின் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் நேற்று இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளதாக கூறப்படுகின்றது.

இந்த தாக்குதலில் குழந்தைகள் மற்றும் பெண்கள் உள்ளிட்ட 71 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் நிறுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர், இதுவரையில் 183 குழந்தைகள் உள்ளிட்ட சுமார் 436 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர் என காஸா சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், காஸா மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் இதுவரையில் 49,547 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளதுடன், ஒரு லட்சத்து 12,719 பேர் காயமடைந்துள்ளனர் என அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.







# போர் நிறுத்த முயற்சி சரியான பாதையில் உள்ளது; ட்ரம்ப்





அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பிற்கும் உக்ரைன் ஜனாதிபதி வொளாடிமிர் ஜெலன்ஸ்கிக்கும் இடையே தொலைபேசி கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

ரஷ்ய ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு பின்னர் இந்த தொலைபேசி கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதுடன் இதனை மிகவும் சிறந்ததென அமெரிக்க ஜனாதிபதி விபரித்துள்ளார்.

அண்மையில் அமெரிக்காவுக்கு உக்ரைன் ஜனாதிபதி விஜயம் மேற்கொண்ட போது இடம்பெற்ற கலந்துரையாடலை விடவும் முற்றிலும் மாறுபட்ட வகையில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது சவூதி அரேபியாவில் முன்மொழியப்பட்ட 30 நாள் போர் நிறுத்தம் தொடர்பில் இரு நாட்டு தலைவர்களும் கலந்துரையாடினர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த கலந்துரையாடல் தொடர்பில் தமது சமூக ஊடகப் பக்கத்தில் பதிவிட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப், போர் நிறுத்த முயற்சிகள் சரியான பாதையில் உள்ளன என தெரிவித்துள்ளார்.

அதேநேரம், உக்ரைனுக்கு மேலதிகமாக வான் பாதுகாப்பு அமைப்புகளை வழங்குவதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஒப்புக் கொண்டுள்ளார் என வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 21.03.2025




பொறுமையான அணுகுமுறை தேவை. திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். உறுதியான அணுகுமுறை தேவை.

பணியிடச் சூழல் அவ்வளவு சிறப்பாக இருக்காது. பணியில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. மகிழ்ச்சியை தக்க வைக்க உங்கள் துணையுடன் அனுசரித்து செல்ல வேண்டும்.

பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

கால் வலியால் அவதிப்பட நேரலாம். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது நல்லது.




இன்று உங்களுக்கு உற்சாகமான மகிழ்சிகரமான நாள். இன்றைய தினத்தை கொண்டாடி மகிழ்வீர்கள். இது உங்களுக்கு மிகுந்த திருப்தி அளிக்கும். உங்கள் விருப்பங்களை திருப்திகரமாக நிறைவேற்றும் நாள்.

பணியில் அதிக வாய்ப்புகள் காணப்படுகின்றன. நீங்கள் திருப்தியாக உணர்வீர்கள். இன்று கிடைக்கும் புதிய வாய்ப்புகள் உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்களின் கருத்துக்களை உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக பகிர்ந்துகொள்வீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்வீர்கள்.

நிதியைப் பொறுத்தவரை இன்று திருப்திகரமாக இருக்கும். இன்று நீங்கள் பணம் சேமிப்பீர்கள். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.




இன்றைய நாளை முன்கூட்டியே திட்டமிட்டு அதன்படி நடந்து கொள்ள வேண்டும். முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்க்கவும். அதனால் சில பிரச்சினைகள் ஏற்படும். எனவே சிறிது கவனமுடன் இருக்க வேண்டும்.

இன்று சாதகமான பலன்களைப் பெற அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். இன்று சிறப்பான நாளாக அமையாது. இன்று பணிச்சுமை காணப்படும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இன்று பொறுமையாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று பணபுழக்கம் போதுமானதாக இருக்காது. தேவையற்ற செலவினங்கள் அதிகமாக இருக்கும்.

முதுகு மற்றும் மூட்டுக்களில் விறைப்பு காணப்படும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. பலன்கள் தாமதமாகக் கிடைக்கும். அதிகம் எதிர்பார்க்காதீர்கள். பிரார்த்தனையில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வது உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் பணிகளை சிறப்பாக திட்டமிடுங்கள்.

உங்கள் மனதில் காணப்படும் பதட்டத்தை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனை தவிர்த்தல் நலம். உங்களை அமைதியாக வைத்திருங்கள்.

உங்கள் மதிப்பு மிக்க உடைமைகளை பத்திரமாக வையுங்கள். இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. நீங்கள் பணத்தை இழக்க நேரலாம்.




இன்று உங்களிடம் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இன்று அவ்வளவு சிறப்பான நாளாக அமையாது. உங்கள் வளர்ச்சி குறித்து கவலைப்படுவீர்கள். இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும்.

இன்று பணியில் உங்களிடம் பொறுமை காணப்படாது. இதனால் தவறுகள் நேரலாம். மனதை நிலைப்படுத்தி பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். நீங்கள் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. நீங்கள் கடன் வாங்க நேரலாம். சிறந்த முறையில் பணத்தை நிர்வகிக்க முயலுங்கள்.




இன்று உங்களின் சொந்த முயற்சி மூலம் வளர்ச்சி காணப்படுகின்றது. வெற்றி நிச்சயம்.

பணியிடத்தில் பதவி உயர்வுக்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் கடின உழைப்பு பாராட்டைப் பெறும். உங்கள் பணியின் தரத்தை மேம்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் உங்கள் அன்பு அதிகரிக்கும்.

நிதிநிலைமை சிறப்பாக காணப்படுகின்றது. இன்று பணத்தை சுதந்திரமாக கையாள்வீர்கள்.

இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக சிறந்த ஆரோக்கியம் காணப்படும்..




இன்று சுறுசுறுப்பான மன நிலையில் காணப்படுவீர்கள். மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். சுய வளர்ச்சிப் பாதையில் செல்வீர்கள். உங்களிடம் மாற்றம் உணர்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். இதற்கு உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கையே காரணம்.

உங்கள் துணையுடன் சுமுகமாகப் பழகுவீர்கள். உங்கள் அனுசரனையான அணுகுமுறை அவரை மகிழ்விக்கும். உறவில் பிணைப்பு வலுப்படும்.

நிதிநிலைமை முன்னேற்றகரமாக காணப்படும். உங்கள் சேமிப்பை அதிகரிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் மிகவும் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




உங்களால் இன்று மகிழ்ச்சியை தக்க வைத்துக்கொள்ள முடியாது. வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் மன-துக்கு ஆறுதல் கிடைக்கும்.

பணியில் வெற்றி காண மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும். எனவே சுமுகமாக பணிகள் நடைபெற திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் குறைந்த நேரத்தை செலவு செய்வீர்கள். உறவில் மகிழ்ச்சி நிலவ எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். உங்கள் பணத்தை இன்று முறையாக பயன்படுத்த இயலாது.

இன்று ஆரோக்கியம் சுமாராக காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 21.03.2025




இன்று சிறிது சோம்பலுடன் காணப் படுவீர்கள். மனதில் குழப்பம் காணப் படும். இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ள இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நலம்.

இன்று முழுவதும் பணியில் முழுகி யிருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

இன்று உங்கள் இருவரிடையே காணப்படும் மனக் குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் சுமுகமான உறவு காணப்படாது. எனவே குழப்பத்தை தவிர்த்து தெளிவான எண்ணங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

பணத்தை கவனாமாகக் கையாள வேண்டும். அஜாக் கிரதை காரணமாக பணத்தை இழக்க நேரலாம்.




இன்று மகிழ்ச்சியான நாள். இன் றைய செயல்களின் விளைவுகள் உங்களுக்கு சாதகமாக அமையும். கடினமான பணிகளையும் இன்று எளி தாகச் செய்வீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

மேலதிகாரிகளின் பாராட்டுகள் குவிந்து கொண்டே இருக்கும். பணிகளை குறித்த நேரத்துக்கு முன்பே தரமாக முடித்துத் தருவீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப் படுத்துவீர்கள்.இது நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தும்.

எதிர்பாராத பண வரவுகள் காணப்படும். நீங்கள் ஆச்சரியப்படும் அளவில் உங்கள் வருமானம் அதிக ரிக்கும். மகிழ்ச்சி நிலவும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக இன்று முழு ஆரோக்கியத்துடன் திடமாக காணப்படுவீர்கள்.




இன்று சிறந்த அதிர்ஷ்டம் காணப் படும். உங்கள் இலக்குகளை எளி தில் அடைவீர்கள். உங்கள் அணுகு முறையில் வளைந்து கொடுக்கும் போக்கு காணப்படும்.

உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் விருந்தில் கலந்து கொள்வீர்கள். அவர்களுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

இன்று உங்கள் துணையிடம் காதல் உணர்வை வெளிப் படுத்துவீர்கள். இதனால் உங்கள் பிரியமானவரிடத்தில் அன்பு அதிகரிக்கும்.

இன்று பணவரவிற்கான வாய்ப்பு உள்ளது. பங்கு வர்த்தகத்தின் மூலம் பணம் சம்பாதிப்பீர்கள்.

இன்று அதிக ஆற்றலுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்களின் சொந்த முயற்சி மூலம் இன்று நீங்கள் அபாரமான வளர்ச்சி காண்பீர்கள்.

பணியிடத்தில் பதவி உயர்வு கிடைக்க லாம். இன்று அர்ப்பணிப்புடன் பணி புரிவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். உங்கள் அணுகுமுறை மூலம் அவரின் இதயத்தில் இடம் பிடிப்பீர்கள்.

நிதி நிலைமையில் முன்னேற்றம் கானப்படும். வங்கி யிருப்பை நல்ல முறையில் பராமரிப்பீர்கள். திருப்தி நிலவும்.

சாதரணமான அணுகுமுறை மூலம் ஆற்றல் அதி கரிக்கும். அதன் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



# கொத்மலை, மஸ்கெலியா சபைகளில் இ.தொ.கா. வேட்புமனுக்கள் ‘அவுட்’!

## நீதிமன்றத்தை நாட முடிவு என ஜீவன் தொண்டமான் அறிவிப்பு

(க.கிஷாந்தன்)

கொத்மலை மற்றும் மஸ்கெலியா பிரதேச சபைகளுக்குரிய வேட்பு மனுக் கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் நீதிமன்றத்தை நாடவுள்ளதாக இ.தொ. காவின் பொதுச்செயலாளரும், நுவ ரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

வேட்புமனு நிராகரிக்கப்பட்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

“கொத்மலை மற்றும் மஸ்கெலியா பிரதேச சபைகளுக்குரிய வேட்பு மனுக் கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது. நிர்வாக தவறு இருக்குமென ஆரம்பத்தில் நினைத் தோம். காரணம் என்னவென்று வின வியபோது, இதன் பின்னணியில் சூழ்ச்சி ஏதும் இருக்குமோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

எனவே, இது சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம். நல்ல முடிவு கிட்டும் என நினைக்கின்றோம். நீதிமன்றத்தை நம்புகின்றோம். இவர்கள் வழங்கியுள்ள காரணம், ஜனநாயகத்தை அவமதிக்கும் வகை யில்தான் உள்ளது.

ஏனைய தொகுதிகளில் எமது நிலை வரம் சிறப்பாக உள்ளது. காங்கிரஸ் எப்போதும் கொடி கட்டி பறக்கும்.” - என்றார்.